செ.வெ.எண்:68 நாள்:23.06.2021

**கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, ஈரோடு மாவட்டத்தில் கொரோனா சிகிச்சை தொடர்பான தகவல்கள், கொரோனா பரிசோதனை மையம் மற்றும் கொரோனா தடுப்பூசி முகாம் உள்ளிட்ட முக்கிய தகவல்களை பொதுமக்கள் நாள்தோறும் https://erode.nic.in/covid-care/ என்ற மாவட்ட இணையதளம் மூலம் பெற்று பயன்பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

------------

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இ.ஆ.ப., அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கொரோனா தடுப்பு பணிகளுக்காக தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கொரோனா சிகிச்சை தொடர்பான தகவல்கள், கொரோனா பரிசோதனை மையம் மற்றும் கொரோனா தடுப்பூசி முகாம் உள்ளிட்ட முக்கிய தகவல்களை நாள்தோறும் பெற்று பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் https://erode.nic.in/covid-care/ என்ற இணையதளம் செயல்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் கொரோனா தொடர்பான விபரங்களுக்கு மேற்கண்ட மாவட்ட இணையதளத்தினை பயன்படுத்தி பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு.